## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் காரணமாக ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழுவின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக

திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் ரூபா 13,334,708,033 ஆன ஆணைக்குழுவின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் இயந்திரங்கள் என்பன அதன் நியாயமான பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆணைக்குழுவிற்கு ரூபா 45,000,000 பெறுமதியான 112 ஏக்கர் 01 றூட் 10.5 பேர்ச் அளவினையுடைய காணியில் அண்ணளவாக 69 சதவீதமான அளவு பிரதேச செயலகமொன்றினால் கைப்பற்றப்பட்டிருந்த போதும் அதற்குரிய சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களை நியாயமான பெறுமதியில் முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கும் வரைவு நிலையான சொத்து மீள் மதிப்பீட்டுக் கொள்கை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பின்னர் அதன் பிரகாரம் மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.<br><br>கதிரான காணியின் உள்ளபடியான நிலைமை நிதி கூற்றுக்களில் குறிப்புக்களின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டான பிரதேச சபையில் இருந்து கைப்பற்றப்பட்ட காணியின் ஒரு பகுதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க முடியாமைக்கு கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் மொத்த சொத்து வகுப்புக்களும் மீள் மதிப்பீடு செய்வதற்கு கணக்காண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ள முடியாமல் இருந்தமையினால் ஆகும். | சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதியின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ள, தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் ரூபா 12,978,983 கிரயமான நிலையான சொத்துக்கள் நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மேற்பார்வைக்காக சமர்ப்பிக்கப்பட்ட வரைவு நிலையான சொத்து மீள் மதிப்பீட்டுக் கொள்கை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பின்னர் மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டுவர வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கணனி மற்றும் அலுவலக உபகரணங்கள் ரூபா 2,182,606 கூடுதலாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. | இது 2020 இன் கணக்குகளின் போது சரி செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் பெறுமானத் தேய்வு சரியாக மேற்கொள்ளப்பட்டு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா ரூபா 3,129,627 ஆன செலவினம் நிதிக்கூற்றுக்களில் பதிவுசெய்யப்படாமை காரணமாக அந்த அளவினால் ஆண்டின் இலாபம் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | ரூபா 3,129,627 தொகை அட்டுறு செலவினமாக குறிப்பிடப்படாதிருந்தமையை ஏற்றுக் கொள்கின்றோம். எதிர்வரும் நிதி ஆண்டில் குறித்துரைத்த பிரகாரம் அட்டுறு செலவினங்களை பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அட்டுறு செலவினங்களின் சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

### 1.5.4 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | பொருளாதார சேவைகள் கட்டணங்கள் வரிக்கு உட்பட்ட புரள்வு | 15,431,747,032 | 16,812,468,625 | 1,380,721,593 | 2019 மார்ச் மாத புரள்வு பொருளாதார சேவை கட்டண கணிப்பீட்டின் போது பிழையான பெறுமதி உள்ளடக்கப்பட்டமையினால் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மொத்த பொருளாதார சேவைக் கட்டணத் தொகையும் வரிப் பொறுப்பாக வருமான வரி பொறுப்பு கணிப்பிடும் போது குறைக்கப்பட்டுள்ளது. | கணக்குகளில் குறிப்பிடப்பட்ட மீதிகள் பட்டோலைகளில் குறிப்பிடப்பட்ட மீதிகளுடன் இணங்கியிருக்க வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஆ) | பெறுமதிசேர் வரி கட்டுப்பாட்டு கணக்கின் மீதி | 18,649,359 | 63,459,533 | 44,810,174 | பெறுமதி சேர் வரி உரிய முறையில் 2019 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டு கடந்த ஆண்டுகளின் பெறுமதி சேர் வரிக் கணக்கு பகுப்பாய்வு செய்யப்பட்டு வேறுபாடுகளை அவதானிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்குகளில் குறிப்பிடப்பட்ட மீதிகள் பட்டோலைகளில் குறிப்பிடப்பட்ட மீதிகளுடன் இணங்கியிருக்க வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | | |
| (அ) | திறைசேரி வைப்புக்கள் | 354,000,000 | முதலீட்டுச் சான்றிதழ் பத்திரம் | இந்த வைப்பிற்கான பணம் மக்கள் வங்கியின் நாரஹேன்பிட்ட கிளையில் 119100143693169 ஆம் இலக்க கணக்கிற்கு காசோலை விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் 2020 யூன் 29 ஆம் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து இந்த வைப்பு தொடர்பாக மேலதிக தகவல்கள் கோரப்பட்டுள்ளது. | உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடன்பட்டோர் மீதி | 344,792,045 | மீதியை உறுதிப்படுத்தும் கடிதம் | 2019.12.31 ஆம் திகதி வரையிலும் ரூபா 1 மில்லியனுக்கு மேற்பட்ட சகல கடன்பட்டோர் மீதியையும் உறுதிப்படுத்தும் கடிதங்கள் நேரடியாக உங்கள் நிறுவனத்திற்கு கிடைக்கும் வகையில் அறிவித்து பதிவுத் தபால் மூலம் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்ததுடன் அந்த கடிதங்களின் பிரதியும் உங்கள் நிறுவனத்திற்கு கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட பெறவேண்டிய கடன் மீதி தொடர்பாக எழுத்து மூல சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஏப்ரல் முதல் 2019 திசெம்பர் வரையும் மற்றும் 2019 ஆம் ஆண்டிற்காக செஸ் வரி அறவிடவேண்டிய 02 நிறுவனங்கள் 2020 ஆகஸ்ட் 18 ஆந் திகதி அளவில் காணப்பட்டது. அவ்வாறே கிடைக்க வேண்டிய ஆரம்ப செஸ் வரி மீதியான ரூபா 1,610,199 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை | Supreme SAT (PVT) Ltd நிறுவனத்திலிருந்து 2019 ஆம் ஆண்டிற்கான செஸ் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. Lanka Broadband Network Limited நிறுவனம் 2016 ஆம் ஆண்டு முதல் செலுத்தாத செஸ் வரியை அறவிடுவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு தேவையான கோவைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2019 யூன் மாதம் முதல் தொலைத்தொடர்பு அனுமதிப் பத்திரம் காலாவதியாகியுள்ள City Cable Links (Pvt) Ltd நிறுவனத்திற்கு அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டு செஸ் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி செஸ் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஸ்ரீ லங்கா டெலிகொம் கம்பனியால் தாமத தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் அபிவிருத்திக் கட்டணங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 813,505 தொகையான மிகை கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த மிகைக் கட்டணத் தொகையை இரத்துச் செய்வதற்கு ஆணைக்குழுவின் அங்கீகாரம் 2019 சனவரி 16 ஆம் திகதி கிடைத்திருந்தது. சர்வதேச தொலைத் தொடர்புகள் வரி செலுத்துதல் தொர்பான வழிகாட்டிக் கோவையை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதன் பின்னரும், வழிகாட்டிக் கோவை வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்டதன் பின்னரும் ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் மிகைக் கட்டணத் தொகையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணப்படுகின்ற சட்டத்தின் கீழ் மிகை கட்டணத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | குத்தகை உடன்படிக்கை கைச்சத்திடாதிருந்த காரணத்தினால் கொக்காவில் அன்டனா மற்றும் டிரான்ஸ்மிஷன் கோபுரம் என்பவற்றைப் பயன்படுத்துகின்ற 03 அரச நிறுவனங்களிடமிருந்து குத்தகை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி சேவை போன்ற நிறுவனங்கள் கொக்காவில் தொலைத் தொடர்பு கோபுரத்தை பயன்படுத்துவதற்குரிய உடன்படிக்கையின் பிரதி அந்த நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இன்று வரை இந்த உடன்படிக்கை கையொப்பமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சகல செயற்படுத்துனர்களுடன் குத்தகை உடன்படிக்கைகளில் கைச்சாத்திட வேண்டும். உடன்படிக்கையின் பிரகாரம் அறவிட வேண்டிய தொகை அறவிட வேண்டும். |
| (ஈ) | உடன்படிக்கை செய்த இரண்டு செயற்படுத்துனர்களிடமிருந்து 2019 ஆகஸ்ட் மாதம் முதல் ரூபா 1,323,856 ஆன குத்தகை மீதியொன்று அறவிட வேண்டியிருந்தது. | எட்டிசலாட் கம்பனி 2019 ஆம் ஆண்டிற்காக குத்தகை தவணை செலுத்துதலில் 2019 ஆகஸ்ட் மாதம் முதல் திசெம்பர் வரையான காலத்திற்குரிய செலுத்துதல்களை மேற்கொள்ளுமாறு 2020 மே 20 இல் மீள் நினைவூட்டல் அனுப்பப்பட்டிருந்தது. மொபிடெல் கம்பனிக்கு 2019 ஆம் ஆண்டின் செப்தெம்பர் முதல் திசெம்பர் வரையான காலத்திற்குரிய செலுத்துதல்களை மேற்கொள்ளுமாறு 2019 நவம்பர் 26 ஆம் திகதி மற்றும் 2020 பெப்ரவரி 17 ஆம் திகதிகளில் மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | குத்தகை உடன்படிக்கைகளின் பிரகாரம் குத்தகைப் பணம் அறவிடப்பட வேண்டும். |
| (உ) | கொக்காவில் அன்டெனா மற்றும் டிரான்ஸ்மிஷன் கோபுரம் என்பவற்றைப் பயன்படுத்துகின்ற 05 செயற்படுத்துனர்களிடமிருந்து மின்சாரப் பட்டியலுக்காக ரூபா 81,813,102 அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் இதிலுள்ள சுயாதீன தொலைக்காட்சி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை | மொபிடெல் கம்பனிக்கு ஒக்தோபர் மற்றும் திசெம்பர் மாதங்களில் செலுத்தப்படாத மின்சாரப் பட்டியலுக்காக மீள் நிலைவூட்டல் அனுப்பப்பட்டுள்ளது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி சேவை போன்ற நிறுவனங்களின் நிலுவை | பணத்தை அறவிடுவதற்காக சரியான திட்ட முறைமையொன்று அறிமுகப்படுப்பட்டு அறவிட வேண்டிய பணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் என்பவற்றிலிருந்து 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 74,627,891 தொகையை அறவிடுவதில் நிச்சியமற்ற தன்மை காணப்படுகின்றது. | செலுத்துதல் தொடர்பாக அந்த நிறுவனங்கள் மற்றும் ஊடகத் துறை அமைச்சு முறையே 2020.06.30 மற்றும் 2020.07.13 ஆம் திகதிய கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. நிலையத்தின் செயற்பாடுகளில் சகல செயற்படுத்துனர்களுக்கும் மின்சாரத்தை வெவ்வேறாக பெற்றுக் கொள்ளமாறு அறிவிக்கப்பட்டதுடன் அதில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி சேவை என்ற நிறுவனங்கள் இந்த பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதி வரை ஆணைக்குழுவின் கடன்பட்டோர் மீதியில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 373,700,914 தொகையான கடன்பட்டோர் மீதியில் 38 வருட பழைய கடன் மீதிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவ்வாறே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்தும் 08 நிறுவனங்களில் இருந்தும் அறவிடவேண்டிய கடன் மீதி முறையே ரூபா 145,254,449 தொகை மற்றும் ரூபா 197,130,954 ஆக காணப்பட்டன. மேலும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 8,184,000 தொகை மற்றும் அணைக்குழு ஆரம்பிப்பதற்கு முன்பிருந்து காணப்படுகின்ற 04 நிறுவனங்களின் கடன் மீதி ரூபா 5,613,513 என்பவற்றை அறவிடுதல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது. | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பணத்தினை அறவிடுவதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் ஆணைக்குழு ஆரம்பிப்பதற்கு முன்னர் அறவிடப்பட்ட கட்டணங்களை புத்தகங்களில் இருந்து அகற்றுவதற்கு உள்ள இயலுமை பரீட்சிக்கப்பட்டு அந்த பெறுமதிகள் புத்தகங்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>தீர்க்கப்படாதுள்ள இந்த தொகை தொடர்பாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டு அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>Electrotex Ltd நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்ட வானொலி அலைவரிசை அனுமதி பத்திரம் தொடர்பாக தற்போது கொழும்பு சிவில் மேல் நீதிமன்றத்தில் | அறவிட வேண்டிய கடன் மீதியை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழக்கொன்று விசாரணையில் காணப்படுகின்றது. | |
| (எ) | மீளாய்வாண்டின் போது மேலதிகமாக அறவிடப்பட்ட ரூபா 2,158,081 தொகையான கடன் மீதியை தீர்த்து பைப்தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருகக்வில்லை. | மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணத்தை மேலும் பகுப்பாய்வு செய்து அதற்கு உரியதாக எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின் கீழ் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கூடுதலாக அறவிடப்பட்டுள்ள கடன் மீதி தீர்த்து வைக்கப்பட வேண்டும். |
| (ஏ) | ஆணைக்குழுவினால் வாடகைக்கு பெற்றுக்கொண்ட தனியார் கட்டிடமொன்று 2015 ஆம் ஆண்டின் போது மீண்டும் கட்டிடம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக செலுத்திய பிடிகாசு (key money) ஆன ரூபா 1,350,000 தொகை மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய கட்டிடம் தொடர்பாக ஆரம்ப கோவை FCID நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தமையால் அந்த கோவைகளின் பிரதியொன்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்த கோவை மற்றும் தேவையான பதிவேடுகள் நீதியமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்காக ஆலோசனைகள் கோரி அனுப்பப்பட்டதுடன் சட்ட பிரிவினால் இது தொடர்பாக இலஞ்ச ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழு அல்லது ஏனைய சட்ட ரீதியான நிறுவனம் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து பூர்த்தி அடைந்ததன் பின்னர் இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவிடுவதற்குள்ள கையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தொகையை அறவிடுதல் புலனாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி அடையும் வரை தாமதிக்காமல் அறவிடல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஐ) | உத்தியோகத்தர் ஒருவருக்கு வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட காலப்பகுதியில் ஊக்குவிப்பு படிகளாக கூடுதலாக செலுத்தப்பட்ட ரூபா 424,000 தொகையை 2019 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய ஒழுக்காற்று கட்டளையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மீள அறவிடுவதற்கு ஆணைக்குழு தவறியிருந்ததுடன் | 2019.08.29 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட ஒழுக்காற்றுக் கட்டளையின் பிரகாரம் திருமதி. ஏ.கே.ஏ. சில்வா என்பவருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 424,000 தொகையை மீளச் செலுத்துமாறு அறிவிக்கப்பட்ட போதிலும், அவர் அந்த செலுத்துதலை புறக்கணித்திருந்தார். மேலதிக செலுத்துதல் பணிக்கொடைக் | சரியாக கணிப்பீடுகளை செய்து தாமதமின்றி கொடுப்பனவு செய்தல் உத்தியோகத்தரின் பொறுப்பாக இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேவையிலிருந்து நீக்கப்பட்ட இந்த உத்தியோகத்தருக்கு பணிக்கொடை கொடுப்பனவு தாமதமானமையால் ரூபா 166,500 ஆன மிகைக் கட்டணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கணிப்பீட்டின் போது குறைத்துக் கொள்வதற்கு பணிக்கொடை செலுத்தும் சட்டத்தின் பிரகாரம் ஊழியருக்கு சட்ட ரீதியான உரிமையொன்று இல்லாதிருந்தமை தொழில் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டமையால் அந்த கட்டளையின் அடிப்படையில் பணிக் கொடை கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்காக சட்ட ரீதியான ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்காக உரிய தரப்பினரிடம் விசாரணை செய்தல் மற்றும் சட்டப் பிரிவு மற்றும் நிதிப் பிரிவுகளின் மூலம் வழங்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் உள்ளபடியாக கணக்கீடு செய்யப்பட்டமையால் அதற்காக ஏற்பட்ட காலத்தின் அடிப்படையில் உரிய பணிக்கொடை கணிப்பிட ஏற்பட்டமையால் மிகை கட்டணமொன்றை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு | நிதி அமைச்சரின் அங்கீகாரமில்லாமல் மீளாய்வாண்டில் ஆணைக்குழுவினால் ரூபா 1,200,000,000 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | 2011.06.09 ஆம் திகதி பணிப்பாளர் நாயகத்தினால் குறுங்கால முதலீட்டுக்காக அங்கீகாரம் கோரி நிதி அமைச்சுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. | முதலீட்டுக்காக முன்னரே அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | உரிய உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டு ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து உழைக்கும் போதே செலுத்தம் வரியாக ரூபா 9,163,291 தொகை மீளாய்வாண்டின் போதும் செலுத்தப்பட்டிருந்தது. | உழைக்கும் போதே செலுத்தும் வரிக்குரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றது. எனினும் இந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற வரி ஆணைக்குழுவினால் உத்தியோகத்தர்களுக்கு மீளளிப்பு செய்யப்படுகின்றது. இவ்வாறே உழைக்கும் போதே செலுத்தும் ஊழியர்களின் கழிப்பனவுகளை மீளளிப்பு செய்தலின் சட்ட ரீதியான நிலைமை தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2018 திசெம்பர் 26 ஆம் திகதிய E/31/18/TRC ஆம் இலக்க கடிதத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பதிலின் மூலம் உழைக்கும் போதே செலுத்தும் வரி ஊழியர்களுக்கு மீளளிப்பு செய்வதற்கான சட்ட ரீதியான பாதிப்பு இல்லையென அறிவிக்கப்படடிருந்தது. | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் உழைக்கும் போதே செலுத்தும் வரி உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டியிருந்ததுடன் அந்த தொகை மீளளிப்புச் செய்ய முடியாது. |
| (இ) | 2011 இன் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்பு வரிச் சட்டம் | தொலைத்தொடர்பு வரி அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டிய போதிலும் 2020 ஆகஸ்ட் 18 ஆந் திகதி வரையில் ஒரு நிறவனத்திடமிருந்து ரூபா 6,358,657 அறவிடப்பட வேண்டியிருந்தது. | செலுத்தாதிருந்த தொலைத் தொடர்பு வரியை அறவிடுவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து ஆலோசனை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொலைத் தொடர்பு வரிச் சட்டத்தின் பிரகாரம் தொலைத் தொடர்பு வரி அறவிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| | 9.14.2 ஆம் பிரிவு | ஆட்சேர்க்கும் நடைமுறைகளுக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஊடாக திறைசேரி செயலாளரின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந் தது. | ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடைமுறை 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவின் சபைத் தீர்மான இலக்கம் 2K14.206.07 இன் பிரகாரம் 2014.05.01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தும் வகையில் ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.14.2 ஆம் பிரிவின் பிரகாரம் திறைசேரியின் இணக்கப்பட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தி | சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் பரிந்துரையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமும் பெறப்படாமல் பதவியணியினர்களுக் கு ஊக்குவிப்புப் படி, மிகையூதியப் படி மற்றும் வீட்டு வாடகை படி மற்றும் பயன்படுத்தப்படாத விடுமுறைகளுக்கான படிகளாக மீளாய்வாண்டின் போது ரூபா 126,488,209 தொகை செலுத்தப்பட்டிருந்தது . | இலங்கை தொலைத் தொடர்பு (திருத்த) சட்டத்தின் 22C(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதவியணியினர் படி செலுத்தப்பட்டிருந்ததுடன் ஆணைக்குழுவின் சம்பளம் மற்றும் படிகள் தீர்மானிக்கும் அதிகாரம் அந்த சட்டத்தின் மூலம் கையளிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் E/164/07/TRC ஆம் இலக்க 2007 ஆகஸ்ட் 15 மற்றும் E/165/07/TRC ஆம் இலக்க 2007 செப்தெம்பர் 24 ஆம் திகதிய கடிதங்கள் மூலமும் மேலும் அது தொடர்பான இணக்கப்பாடு பிரசுரிக்கப்பட்டுள்ளது. | 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் படிகள் மற்றும் சம்பளங்களை செலுத்தும் போது சம்பளம் மற்றும் ஆளனி ஆணைக்குழுவின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் என்பன பெறப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2007 யூன் 01 ஆந் திகதிய என்எஸ்சீசீ/3/ஏபீ சீ/24 ஆம் இலக்க சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் கடிதம் | பதவிநிலைத் தரமல்லாத பதவியணியினர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த போக்குவரத்துப் படியான ரூபா 2,000 தொகையை விஞ்சி ரூபா 6,000 வீதம் செலுத்தப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டில் ரூபா 8,196,000 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | 2010 மார்ச் 11 ஆம் திகதிய 2KX.189.15(17) ஆம் இலக்க ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் பதவி நிலைத்தரமல்லாத பதவியணியினருக்காக போக்குவரத்து படி ரூபா 6,000 செலுத்துதல் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | தேசிய சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் கடிதத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட படிகள் மாத்திரம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 37,883,540,711 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 45,706,552,824 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 7,823,012,113 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம், தொலைத்தொடர்பு வரி வருமானம், தொலைத்தொடர்பு அபிவிருத்தி கட்டண வருமானம் மற்றும் வெளியே செல்கின்ற உள்நாட்டு நுழைவுக் கட்டணத்தின் அடிப்படையிலான வருமானம் (Levy on outgoing local access charges) ரூபா 11,261,338,834 இனால் குறைவடைந்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கியமான பகுப்பாய்வு

2018 நவம்பர் 05 ஆம் திகதி மற்றும் 2019 திசெம்பர் 01 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் தொலைத் தொடர்பு வரி 25 சதவீதம் முதல் 11.25 சதவீதம் வரை குறைக்கப்பட்டமையின் காரணமாக தொலைத்தொடர்பு வரி வருமானம் ரூபா 9,283,607,990 இனால் குறைவடைந்தமை, 2019 யூன் 11 முதல் அமுல்படும் வகையில் வெளிச்செல்லும் உள்நாட்டு நுழைவு கட்டணத்தின் அடிப்படையில் வரி நீக்கப்பட்டமை மற்றும் ஸ்மார்ட் போன் பாவனை மற்றும் ஓவர் த டொப் (Over the top) இலவசமாக பயன்படுத்தக் கூடிய மொபைல் அப்ளிகேசன் (Mobile Application) பயன்பாடு உயர்வடைந்து சென்றமை வருமானம் குறைவடைந்தமைக்கு தாக்கமளித்திருந்தது.

ஆணைக்குழுவின் மொத்த செலவினங்களில் நிர்வாக மற்றும் செயற்பாட்டு செலவினங்களுக்காக 89 சதவீதம் செலவிடப்பட்டிருந்ததுடன் பதவியணியினர் சம்பளம் மற்றும் படிகளுக்கான 55 சதவீதமும் அதில் உள்ளடங்கியிருந்தது. எவ்வாறாயினும் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதன் பிரதான நோக்கமான தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துதலுக்காக மொத்த செலவினத்தில் 10 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தக் கமபனியால் கோபுரம் இது வரை கையளிக்கப்டாதிருந்த போதிலும் 2019 செப்தெம்பர் 16 ஆந் திகதி தாமரைக் கோபுரம் திறக்கும் விழாவிற்காக ரூபா 11,325,012 தொகை செலவிடப்பட்டிருந்தது. | குறிப்பிட்டுக்கொள்கின்றோம். | சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் வியாபார நடவடிக்கைள் மேலும் தாமதமின்றி ஆரம்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 செப்தெம்பர் 16 ஆந் திகதி நடைபெற்ற கொழும்பு தாமரைக் கோபுரம் திறப்பு விழாவின் செயற்பாடுகள், முகாமைத்துவம் செய்தல் மற்றும் உணவு பானங்களை வழங்குவதற்காக உடன்படிக்கையொன்றில்லாமல் ரூபா 7,072,472 தொகை செலுத்தப்படடிருந்ததுடன் அந்த பெகைகள் 2019 ஆம் ஆணண்டின் பெறுகை திட்டத்திலோ அல்லது திருத்திய பெறுகை திட்டத்திலோ உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்காக பாதீட்டுத் திட்டம் தயாரிக்கும் போது உரிய பிரிவுகளான விஷேட செயற்திட்ட பிரிவின் மூலம் தாமரைக் கோபுரம் திறத்தல் தொடர்பாக சரியான தீர்மானமொன்று எடுத்து நிதி ஏற்பாட்டை ஒதுக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் 2019 இன் பெறுகைத் திட்டத்தில் இந்த பெறுகைகள் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் ஆண்டின் நடுப்பகுதியில் திருத்தப்பட்ட பெறுகைத் திட்டத்திலும் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தது. | ஆண்டின் போது மேற்கொள்ளப்படுகின்ற சகல ஒப்பந்தங்களும் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு சரியான கட்டுப்பாட்டில் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் உடன்படிக்கை மூலம் ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொக்காவில் நிலையத்தின் நடமாடும் செயற்பாட்டு கட்டிடத்தின் கொங்கிரீட் கூரை நீர் தடை செய்வதற்கான செயற்பாடுகளுக்காக மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு 2017 ஆம் ஆண்டின் போது நேரடியாக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்த | நிறுவனத்தின் முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகத்தர் இருக்காமையினால் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திடமிருந்தும் ஆலோசனை சேவைகள் பெறப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்திற்கும் அந்த | பெறுகை அட்டவணையின் பிரகாரம் ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதும் மதில் ஓர வேலைகள் மதிப்பீடு செய்யப்படாமையினால் கோரப்பட்ட பராமரிப்பு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தகாரரின் தகைமை சரியாக மதிப்பீடு செய்யப்படாமல் புதிய ஒப்பந்தமொன்று ரூபா 1,116,350 தொகையில் தனியார் நிறுவனமொன்றுக்கு 2019 யூன் 19 ஆந் திகதி வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. ஆணைக்குழு பெறுகை கால அட்டவணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் இருந்தமையால் இச்செயற்பாட்டிற்காக 03 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் எடுத்திருந்தது. | Heat Insulation work என்ற பகுதியை உள்ளடக்குதல் தவறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த குறைபாடுகள் எதிர்வரும் பெறுகை நடவடிக்கைகளின் போது கவனத்திற் கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். | |
| (ஆ) | ஆணைக்குழுவின் புதிய கட்டிட நிர்மாணம் | | |
| (i) | 2016 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய அமப/16/1604/701/022 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஆணைக்குழுவின் தற்போது காணப்படுகின்ற ‘‘தலைமை அலுவலகத்தை நவீனமயமாக்குவதற்கு” அமைச்சரவை அங்கீகாரம் அளித்த போதிலும், பணிப்பாளர் நாயகத்தினால் ஆணைக்குழுவிற்கு ‘‘புதிய கட்டிடமொன்ற நிர்மாணித்தல்’’ இற்காக ரூபா 502 மில்லியனை செலவிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததாகவும் ஆலோசனை நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து அதனை ரூபா 344 மில்லியன் வரை குறைத்துக்கொண்டுள்ளதாகவும் என குறிப்பிட்டு 2018 யூலை 10 ஆந் திகதி தேவையான குழுவினை நியமிப்பதற்காக ஜனாதிபதி செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்டுக்கொள்கின்றோம். | பிழையான தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்கள் பொறுப்பாகும். |
| (ii) | எவ்வாறாயினும் ரூபா 200 மில்லியன் மதிப்பீட்டுடன் ‘‘ஆணைக்குழுவின் தலைமை | தொழில்நுட்ப பிரிவைச் சேர்த்தல், புதிய மலசல கூட முறைமையொன்றை | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் அங்கீகாரம் பெற |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலகத்திற்கு நீடிப்பு'' என மீண்டும் ஒப்பந்தம் மாற்றப்பட்டு அங்கீகாரம் இன்றி கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் மேலே நியமிகக்ப்பட்ட குழு இந்த ஒப்பந்தத்திற்காகவும் நடவடிக்கை எடுத்திருந்தது. மேலும் சரியான கவனத்துடன் நடவடிக்கை எடுக்காமையினால் மேலதிக செலவினங்களுக்காக ரூபா 33 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | அறிமுகப்படுத்துதல், கட்டிடங்களின் முன்னால் Canopy அறிமுகப்படுத்துதல் மூலம் கட்டிடத்தின் பயன்பாட்டை உயர்வடையச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | வேண்டியிருந்ததுடன் சரியான திட்டத்தின் பிரகாரம் ஒப்பந்தங்களை அமுல்படுத்துவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | ஓப்பந்தத்தைப் பூர்த்திசெய்வதற்கு குறிப்பிடப்பட்ட 2020 பெப்ரவரி 14 ஆந் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்படாதிருந்ததுடன் 10 நாட்களினால் காலத்தை நீடிப்பதற்கு மதியுரை நிறுவனம் பரிந்துரை செய்திருந்த போதிலும் அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | காலத்தை நீடிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்படாதிருந்தமை யால் மதியுரையாளரின் பரிந்துரையைப் பெற்று தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | தாமரைக் கோபுர செயற்திட்டம்<br>---------------------------------------------------<br>2010 ஒக்தோபர் 29 ஆந் திகதிய 10/2473/401/031 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தாமரைக் கோபுர நிர்மாண ஒப்பந்தத்திற்காக 2012 சனவரி 03 ஆந் திகதி தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு 02 சீன கம்பனிகளுடன் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. ஒப்பந்தப் பெறுமதி அ.டொலர் 104,300,000 தொகையாக இருந்ததுடன் 2012 நவம்பர் 12 ஆம் திகதி முதல் 2015 மே 12 ஆந் திகதி வரையான 912 நாட்களில் இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாகக் காணப்பட்ட போதும் 2017 ஒக்தோபர் 31 வரை ஒப்பந்தக் காலத்தை நீடிப்பதற்கு ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியிருந்தது.<br>இந்நிர்மாணத்திற்காக நிதியத்தை வழங்குவதற்கு 2012 செப்தெம்பர் 17 ஆந் திகதி இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, EXIM வங்கியுடன் கடன் | | |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்த பெறுமதியில் 85 சதவீதம் அதாவது அ.டொ. 88.655 மில்லியன் வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆகஸ்ட் 18 ஆந் திகதியளவில் கடன்தொகை பெற்று பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. | | |
| (i) | 2011 திசெம்பர் 14 ஆந் திகதிய அமப/11/2262/501/026/ரீபீஆர் ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தாமரைக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்ட 2.59 ஹெக்டேயர் காணி நகர அபிவிருத்தி அதிகாரசபை மூலம் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட வேண்டிய போதும் அவ்வாறு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திடமிருந்து நேரடியாக காணியினை கைப்பற்றும் வகையில் அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக உரிய ஆவணங்கள் வரிசை அமைச்சிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி காணி கையேற்கப்பட வேண்டும். |
| (ii) | நிர்மாண ஒப்பந்த குறித்த பிரகாரம் பூர்த்தி செய்யப்படாமை காரணமாக கடன் தொகையில் 76 சதவீதம் அதாவது அ.ஐ.டொ 67,259,758 தொகை மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் மொத்த கடன் தொகைக்காக காப்புறுதி கட்டணங்கள், இணக்கப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் முகாமைத்துவக் கட்டணங்கள் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தமையினால் பெற்றுக்கொள்ளாத கடன் தொகைக்கு விகிதாசாரமாக கொடுப்பனவு செய்யப்பட்ட காப்புறுதி கட்டணங்கள், இணக்கப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் முகாமைத்துவக் கட்டணங்களின் அளவு அ.டொ. 2,911,633 தொகை பயனற்ற செலவினமாகிருந்தது. | குறிப்பிட்டுக்கொள்கின்றோம். | நிர்மாணங்கள் தாமதமடைந்தமையினால் பெற்றுக் கொள்ள முடியாதிருந்த கடன் தொகைக்காக பயனற்று செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணம், இணக்கப்பாட்டுக் கட்டணம், முகாமைத்துவ கட்டணங்களுக்காக உரிய தரப்பினர் பொறுப்பாக இருக்க வேண்டும். |
| (iii) | இச்செயற்திட்டத்தின் நிதி இயலளவு அறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிலிருந்து செயற்திட்டத்தின் செயற்பாடுகளில் வருடாந்தம் ரூபா 1,685 மில்லியன் வருமானமொன்றை உழைத்துக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் | வணிக செயற்பாடுகளை ஆரம்பித்தல் அரசாங்கத்தின் உரித்தாகவுள்ள கம்பனியொன்றின் மூலம் மேற்கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிறுவனத்திற்கு வணிக செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியாதிருந்ததாக இனங்கண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையால் உரித்தற்றுப் போன வருமானங்களை |

| | | | |
|---|---|---|---|
| | தாமதமானதன் பேரில் அவ்வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | தவிர்த்துக் கொள்வதற்காக துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் கம்பனியொன்றை தாபிப்பதற்கு அதிகாரம் இல்லாதிருந்த போதும் 2010 ஒக்தோபர் 29 ஆந் திகதிய 10/2473/401/031 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் 5.4 viii ஆம் இலக்கத்தின் மூலம் ஆணைக்குழுவின் உரித்தின் கீழ் முககாமைத்துவு ஆலோசணைக் கம்பனியொன்றை தாபிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஆதனால் மீண்டும் 2019 செப்தெம்பர் 11 ஆந் திகதிய அமப/19/2305/103/140 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் கொழும்பு தாமரைக் கோபுரத்தின் வணிகமயமாக்கல் செய்யும் வகையில் அரச கம்பனியொன்றாக தாபிப்பதற்கு திறைசேரியால் அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்த போதும் அச்செயற்பாடுகள் கணக்காய்வு திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வணிக செயற்பாடுகளை ஆரம்பித்தல் அரசாங்கத்தின் உரித்தாகவுள்ள கம்பனியொன்றின் மூலம் மேற்கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | வணிக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக தாமதமின்றி செயற்பாடுகளில் எடுக்க வேண்டும். |
| (v) | நிர்மாண ஒப்பந்தத்தின் 8.7 ஆம் பிரிவின் பிரகாரம் நாளொன்றிற்கான தாமத தண்டப்பணம் ஒப்பந்தத் தொகையில் 0.05 சதவீதமும் கூடியது ஒப்பந்தத் தொகையில் 10 சதவீதமுமாக இருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்தகாரரிடம் இருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட தாமத தண்டப்பணமான அ.டொலர் 10,430,000 தொகை ஆணைக்குழுவினால் ஒப்பந்காரருக்கு செலுத்த வேண்டிய தொகையில் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டிருந்த போதும் அதற்காக செயற்திட்ட மதியுரையாளரின் பரிந்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமத தண்டப்பணமான அ. டொலர் 10,430,000 தொகை ஒப்பந்த காரரிடமிருந்து அறவிடப்பட்டுள்ளது. | ஒப்பந்தகாரரிடமிருந்து கைவிடப்பட்டுள்ள தாமதக் கட்டணங்களுக்காக மதியுரையாளரின் பரிந்துரை பெறப்பட வேண்டும். |
| (vi) | தாமரைக் கோபுர நிர்மாண ஒப்பந்தத்தின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு 2017 | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமத தண்டப்பணமான. டொலர் | ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்படாமையி |

| | | | |
|---|---|---|---|
| | ஒக்தோபர் 31 ஆந் திகதி கையளிக்க வேண்டியிருந்த போதும் ஒப்பந்தகாரரால் இதுவரை அது கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை தாமதமான காலம் 1035 நாட்களாக இருந்த போதும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமத கட்டணங்கள் அறவிடுதல் 200 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | 10,430,000 தொகை ஒப்பந்த காரரிடமிருந்து அறவிடப்பட்டுள்ளது. | னால் அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற வருமான இழப்புக்களுக்காகவும் மேலதிக ஆலோசனைக் கட்டணங்களை உள்ளடக்கி ஏனைய செலவினங்களுக்காகவும் ஒப்பந்தகாரரை உள்ளடக்கிய உரிய தரப்பினர் பொறுப்பாகும். |
| (vii) | செயற்திட்ட வருமானத்திலிருந்து கடன் தவணையை கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யாமை காரணமாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கடன் தவணை மற்றும் வட்டியாக அ.டொலர் 39,335,307 தொகை ஆணைக்குழு கொடுப்பனவு செய்திருந்தது. இவ்வாறு கடன் தவணை மற்றும் வட்டி கொடுப்பனவு செலுத்த நேர்ந்தமை காரணமாக 2016 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக திரட்டிய நிதியத்திற்கு செய்யப்பட்ட அனுப்புகை 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 30,400 மில்லயன் தொகை குறைவடைந்திருந்தது. | குறிப்பிட்டுக்கொள்கின்றோம். | ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்படாமையினால் அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற வருமான இழப்புக்களுக்காகவும் மேலதிக ஆலோசனைக் கட்டணங்களை உள்ளடக்கி ஏனைய செலவினங்களுக்காக ஒப்பந்தகாரரை உள்ளடக்கிய உரிய தரப்பினர் பொறுப்பாகும். |
| (viii) | தாமரைக் கோபுர நிர்மாணத்திற்காக கடன் தொகை பெற்றுக்கொண்டதன் காரணமாக காப்புறுதி கட்டணங்கள், இணக்கப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் முகாமைத்துவக் கட்டணங்கள் என்பன 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வட்டியாக கூட்டுமொத்தமாக அ.டொலர் 23,775,376 தொகை மேலதிகமாக செலவிடுவதற்கு ஆணைக்குழுவிற்கு நேர்ந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | அரசாங்கத்திற்கு ஆகக் கூடிய நலன்களைப் பெறும் வகையில் கடன் பணத்தை பெற்றுக் கொள்ளும் போது மேலதிகமாக செய்வதற்கு ஏற்படுகின்ற செலவினங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் பொறுப்பாக இருத்தல் வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவின் நிறுவன கட்டமைப்பு, பதவியணியினர் எண்ணிக்கை மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் திருத்தங்கள் செய்யப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 66 ஆக காணப்பட்டது. | 2019 செப்தெம்பர் 31 இல் உள்ளவாறு செயல்முன்னேற்றம் 40 சதவீதம் மாத்திரம் ஆனமையால் தொடர்ந்து இந்த நிறுவனத்தின் மூலம் உரிய பணிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்ய முடியாதிருந்தமையால் மதியுரை நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | அத்தியவசிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளுதல், நிறுவன கட்டமைப்பு மற்றும் ஆட்சேர்ப்பு சட்ட தொகுதியில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத உதவிக் கணக்காளர் பதவிக்காக 2015 ஆம் ஆண்டின் போது ஆட்சேர்க்கப்பட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர்களுக்கு அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டில் சம்பளம், வீட்டு வாடகை படிகள், ஊக்குவிப்பு படிகள் மற்றும் போக்குவரத்து படிகளாக ரூபா 1,939,975 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இந்த அங்கீகரிக்கப்பட்ட 02 ஏனைய பதவிகளும் மீண்டும் மேலேயுள்ள 01 ஆம் இலக்கத்தின் கீழ் திருத்துவதற்கு அல்லது அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இரண்டு உதவி கணக்காளர் பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திருத்தப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 42 பணிகள் பூர்த்திசெய்யப்படாதிருந்ததுடன் செயல்முன்னேற்றம் 10 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையாக இருந்தது. | 42 பணிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமை மற்றும் அதன் செயல் முன்னேற்றம் 10 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையாகுவதற்கு தவிர்க்க முடியாத விடயங்கள் மற்றும் சமவங்கள் தாக்கமளித்திருந்தது. இந்த பின்னடைவுகளை இயலுமான வரை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு செயல் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யும்போது | திட்டத்தின் பிராகரம் திட்டமிட்ட பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தேவையான கவனத்தை செலுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | நிர்ணயிக்கப்பட்ட செலவினங்களுக்காக பாதீட்டு நிதிஏற்பாடு ரூபா 678,550,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான செலவினம் ரூபா 78,881,625 தொகை மாத்திரமாக இருந்தது. தேசிய உபகரணங்களை அறிமுகப்படுத்தும் ஆவணங்களை செயற்பாட்டுக்கு கொண்டுவருவதற்கு (Implementatiom of National Identification Registry – NEIR) இற்காக ரூபா 600 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் செயல்நடவடிக்கை திட்டத்திலிருந்து அகற்றப்பட்டமையின் காரணமாக நிறுவனத்தை தாபிக்கும் நோக்கமான தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் சர்ச்சைக்குரியதாக இருந்தன. | இந்த பணிகளை செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அகற்றுதல் இரண்டாம் காலாண்டின் போது செயல் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யும் போது ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட குறித்துரித்த செலவினங்களை செய்வதன் மூலம் ஆணைக்குழுவின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளுவதற்கு திட்டமிடப்பட்ட மீளாய்வாண்டின் போது ரூபா 25 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்ட தொலைத்தொடர்பு பரிவர்த்தனை உபகரணங்களை பரீட்சிப்பதற்காக சிறந்த பாதுகாப்பான ஆய்வு கூடமொன்றை தாபித்தல் நிதிப் பெறுகை கஷ்டமானதன் காரணமாக மீளாய்வாண்டின் போதும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துகின்ற சந்தர்ப்பத்தின் போது நடைமுறைச் சொத்துக்கள் போதியளவில் இல்லாதிருந்தமை அறிக்கையிடப்பட்டதன் காரணமாக இந்த பணிகளை எதிர்பார்த்த பிரகாரம் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே நாட்டில் எழுந்த நிலைமையின் அடிப்படையில் அரசாங்கத்தினால் நிதி அமைச்சின் ஊடாக விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையினை அமுல்படுத்துவதற்கு ஏற்பட்டமையினால் அதற்காக தாக்கமளித்திருந்தது. | திட்டமிடப்பட்ட பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2016 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளவேண்டி இருந்த நிறமுகாமைத்துவ பிரிவை | 2016 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ள வேண்டியிருந்த நிற | நிற முகாமைத்துவ பிரிவின் தானியங்கும் முறைமையை |

| | | |
|---|---|---|
| தானியங்கும் மறைமையினை தாபிப்பதற்காக (ADMS) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போதும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அது மேற்கொள்ளப்படாமல் காலம் தாழ்த்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவ பிரிவின் தானியங்கும் முறைமையை (ADMS) ஸ்தாபிப்பதற்கு 2019 ஆம் ஆண்டின் போது ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியதற்கு மேலதிகமாக இறுதி செயற்திட்ட திட்டமொன்றை தயாரித்தல் மற்றும் உரிய உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட விடயங்களை பூர்த்தி செய்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தாமதமின்றி ஸ்பாதித்தல் வேண்டும். |

## 4.2 நிலையான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தொலைத்தொடர்பு தகவல் தொழில்நுட்ப மேம்படுத்தலுக்காக 2030 வரையில் அனைத்து கிராமிய பிரதேசத்திலும் தொலைத்தொடர்பு செயற்பாடுகளை மேவுகை செய்யும் இலக்கை அடைந்துகொள்ளும் போது உரிய பணிகளை ஒழுங்கமைப்பதற்காக தேவையான திருப்புமுனை கட்டங்களை வெளிப்படுத்துதல் போதியளவில் இனங்காணப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. | நிறைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தொலைத்தொடர்பு தகவல் தொழில்நூட்ப மேம்பாட்டிற்காக தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களையும் மேவுகை செய்யும் வகையில் 2030 வரையில் சகல கிராமிய பிரதேசங்களிலும் தொலைத் தொடர்பு நடவடிக்கைகளை மேவுகை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | 2030 வரையில் சகல கிராமிய பிரதேசங்களிலும் தொலைத்தொடர்பு நடவடிக்கைகளை மேவுகை செய்யும் இலக்கை அடைந்து கொள்ளும் போது உரிய பணிகளை ஒழுங்குபடுத்துவதற்காக திருப்புமுனை கட்டங்களை மேவுகை செய்தல் போதியளவில் இனங்காணப்படல் வேண்டும். |